செ.வெ.எண்.9/2016.

நாள்: 04.11.16.

# செய்தி குறிப்பு

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தேசிய திரைப்பட வளர்ச்சி கழகம் மூலம் 14.11.2016 முதல் 13.12.2016 வரை ஒரு மாத காலத்திற்கு டிஜிட்டல் வீடியோகிராபி, டிஜிட்டல் ஸ்டில் போட்டோகிராபி, வீடியோ எடிட்டிங்(AVID) மற்றும் மல்டிமீடியா டிசைனிங் ஆகிய பிரிவுகளில் இலவச பயிற்சி வழங்க மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த பயிலரங்கில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்கள் 18 முதல் 45 வயது வரம்புக்குள் இருக்க வேண்டும். இதற்கான குறைந்தபட்ச கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி, அத்துடன் அடிப்படை கணினி அறிவ பெற்றிருத்தல் வேண்டும்.

இந்த இலவச பயிலரங்கத்திற்கு நேர்முகத் தேர்வு நவம்பர் மாதம் 09.11.2016, 10.11.2016 மற்றும் 11.11.2016 ஆகிய தேதிகளில் மாவட்ட திட்டக் குழு அலுவலகம், மாவட்ட பெருந்திட்ட வளாகம், விழுப்புரத்தில் காலை 10.00மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

நேர்முகத் தேர்வுக்கு வரும் விண்ணப்பதாரர்கள் தங்களது பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ், சாதி சான்றிதழ், குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை ஆகிய அனைத்து அசல் மற்றும் நகல் சான்றிதழ்களுடன் மூன்று பாஸ்போர்ட் அளவு புகைப்படம் கொண்டு வரவேண்டும்.

மேலும் விவரங்களுக்கு, விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை 04146-226417 என்ற தொலைபேசி எண்ணிலும் அல்லது தேசிய திரைப்பட வளர்ச்சி கழக அலுவலகத்தை 7418920267 / 7418920170 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

தகுதியும், விருப்பமும் உள்ள நபர்கள் இப்பயிற்சியில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு விழுப்பரம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் இல. சுப்பிரமணியன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஒப்பம்..........
மாவட்ட ஆட்சியர்
விழுப்புரம்

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
விழுப்புரம்.